முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் அக்டோபர் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.2/2025

இன்

அசல் வழக்கு எண்.253/2016

-----

சேது ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1) தமிழ்நாடு அரசு அதன் மதுரை மாவட்ட ஆட்சிதலைவர் மூலம்.
2) திருப்பரங்குன்றம் தாசில்தார்
3) மகேஸ்வரி
4) வாசுமதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக, இம்மனு 13.10.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.செல்வம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதுரைக்கு

போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1ஐ மீண்டும் recall செய்ய வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் வா.சா.1ஐ விசாரணை செய்ய வேண்டி மீண்டும் recall செய்ய இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**2) தீர்வு**

2.1) இம்மனுவானது வா.சா.1ஐ விசாரணை செய்ய வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 கடந்த 23.08.2018ம் தேதியில் முதல்விசாரணை செய்யப்பட்டு, அதன் பின்னர் 06.02.2019ம் தேதியில் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், மீண்டும் வா.சா.1ஐ விசாரணை செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) மேற்படி மனுதாரர்/வாதி தனது தரப்பில் தனது வழக்கை நிரூபிக்க கூடிய முக்கியமான ஆவணங்களை குறியீடு செய்ய விடுபட்டு போனது என்றும், 07.05.2009ல் பிரதிவாதிகளின் தாயாரான கருப்பாயி மற்றும் வாதியும் ஒப்பந்தம் எழுதிக்கொண்டதாகவும், மேற்படி விவரத்தை குறியீடு செய்ய தன்னை Re-call செய்து மீண்டும் விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது என்றும் கூறி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

2.3) எனவே, மேற்படி அசல் வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது, வா.சா.1ஐ recall செய்து, மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை செய்வது இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கானதாகவும், சட்டப்படியானது மற்றும் நீதியின்

நலன்பொருட்டு உகந்தது என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி வா.சா.1ஐ விசாரணை செய்வதால் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு காரணியாக அமையுமே தவிர, வழக்கு தரப்பினர்கள் யாருக்கும் சட்டத்திற்கு புறம்பான சாதக பாதகம் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டு, வா.சா.1ஐ விசாரணை செய்யும்விதமாக PW–1ஐ Re–call செய்து உத்தரவிடுவது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மேலும் இம்மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வா.சா.1 04.11.2025ம் தேதி அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு PW.1- 04.11.2025ல் ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 30.10.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.30 12:17:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு**:-

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.30 12:17:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.2/2025
இன்
அசல் வழக்கு எண்.253/2016
செவ்வை உத்தரவு
நாள் : 30.10.2025